1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

மத்துகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க மத்துகம பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மத்துகம பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.2 பந்தியில் (அ), (ஆ), மற்றும் (இ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கணக்கீட்டு நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்று தயாரித்த பாதீடுகளில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கணக்கீட்டு நியமம் 3 ஆம் அத்தியாயத்தின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நடப்பாண்டு நிதிக்கூற்று காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய சமமான காலப்பகுதி தொடர்பாக ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் நிறுவனத்தால் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(இ)	கணக்கீட்டு நியமம் 03 ஆம் அத்தியாயத்தின் 3.27 முதல் 3.32 இடையிலான பந்திகளுக்கு இணங்க	2025 இன் காசுப் பாய்ச்சல் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறைக்

	மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	கணக்கீட்டு நியமத்தின் 06 அத்தியாயத்தின் 6.13 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து ஒன்றாக பயன்படுத்துவதற்கு எடுக்ககூடிய சந்தர்ப்பத்தில் இருந்து பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டினைப் போன்று மீளாய்வாண்டிற்காகவும் நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	கணக்கீட்டு நியமம் 9 அத்தியாயத்தின் 9.6 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகளுக்கான அரசாங்க கையளித்தல்களுக்கு உரிய பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட பெறுமதிக்கு சமமான அளவு ஒன்று 2020 ஆம் ஆண்டு முதல் வருமானத்தில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் சபை அந்த சீராக்கங்ககள் மேற்கொள்ளாமையால் ஆண்டின் வருமானம் சரியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	முன்னைய ஆண்டின் சம்பள மீளளிப்புக்காக கிடைத்த ரூபா 100,111,630 தொகை ரூபா 99,387,768 ஆக கணக்கீடு செய்யப்பட்ட தவறு இந்த ஆண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	முன்னைய ஆண்டில் ரூபா 2,461,134 ஆன இலங்கை வங்கிக் கணக்கு மீதி ரூபா 2,695,092 ஆக காண்பிக்கப்பட்ட தவறும் இந்த ஆண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(இ)	2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 110,000 ஆன 20 பாலம்கொடி அலுவலக உபகரணத்தின் கீழ் கணக்கு செய்யப்பட்ட தவறும் இந்த ஆண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி

(ஈ)	முத்திரைக் கட்டண வருமானத்தில் ஈடு செய்யும் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 12,000,000 ஆன கம்பெக்டர் வண்டியின் பெறுமதி நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 643,875 நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் அதாவது நடைமுறையல்லா முதலீட்டின் கீழும் காண்பிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் ரூபா 643,875 அதிகரித்துக் காண்பிக்கப்படிருந்தது.	2025 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(உ)	வேலைக் கடன் கொடுத்தோர் ரூபா 2,736 வரவு வைப்பதற்குப் பதிலாக நானாவித கடன் கொடுத்தோர் ரூபா 573,780 வரவு வைத்து பேரேட்டில் சீராக்கப்பட்டமையால் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் திரண்ட நிதியம் முறையே ரூபா 571,044 குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்புக்கள் அச்சிடல் வழுவாகும்.	நாட்குறிப்புக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	பெறவேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 413,750 பேரேட்டுக் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.	2025 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நாட்குறிப்புக்கள் கணக்குகளில் சரியாக சீராக்கப்படல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டிற்கு உரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,409,871 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,493,130 ஆக காணப்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 83,259 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஏ)	வங்கி நடைமுறை கணக்கிற்குரிய 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 4,779,212 ஆக இருந்த போதும் அந்த மாத வங்கிக் கணக்கிணக்க கூற்று தயாரிக்கும் போது காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 4,545,255 ஆக எடுக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஐ)	மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 19,774,513 ஆன மீள் மதிப்பீட்டு ஒதுக்கப் பெறுமதி உரிமை மூலதன	2025 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

	மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.	எடுக்கப்படும்.	
(ஔ)	கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தலின் கீழ் பாத்திரங்கள் உபகரணங்கள் 20 சதவீதம் படி பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் அலுவலக உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மேற்படி	வெளிப்படுத்துதல்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஓ)	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் ரூபா 1,464,418,928 ஆக இருந்த போதிலும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் அது ரூபா 1,342,831,027 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 121,587,901 தொங்கல் மீதி காணப்பட்டது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்கள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 15 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகள் மற்றும் பேரேடுகள் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே இணக்கமின்மை ரூபா 31,642,078 வேறுபாடு ஆகும்.	பதிலளிக்கப்படவில்லை.	வேறுபாடுகளுக்கு உரிய காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு விடயங்களில் கூட்டுத்தொகையான ரூபா 144,114,153 இற்குரிய பட்டோலைகள் சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	பட்டோலைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ)	விநியோகித்து 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துடன் உள்ள ரூபா 295,550 கூட்டுத்தொகையான 10 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	தேவையான மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2018 திசெம்பர் 31 ஆந் திகதிய நிதியல்லாச் சொத்துக்கள் மதிப்பீட்டு வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி	சபைக்குச் சொந்தமான 55 கட்டிடங்கள் 2018 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் 249 காணிகள் மதிப்பீடு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	செலவினங்கள் அதிகரித்தமையால் 2018 ஆம் ஆண்டின் பின்னர் வியாபாரப் பெறுமதி உள்ள கட்டிடங்கள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	தொடர்புடைய வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	தாபன விதிக் கோவையிக் VIII அத்தியாயத்தின் 10(அ)(இ) பந்தி	முறையான அங்கீகாரம் இன்றி 30 நாட்கள் விடுமுறை சேவைக்காக மீளாய்வாண்டில் சபையின் செயலாளருக்கு கூட்டு மொத்தமாக ரூபா 80,514 செலுத்தப்பட்டிருந்ததுடன் அது 08 மணித்தியாலங்கள் மேவுகை செய்யாமல் 08 நாட்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 20,778 தொகையும், வெளியே சென்ற திகதி மற்றும் வேலை செய்யாத 02 நாட்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 7,792 தொகையும் செலுத்தப்பட்டுள்ளது.	பெருவிரல் அடையாள இயந்திரம் செயலிழந்த சந்தர்ப்பத்தின் போது வருகைப் பதிவேட்டில் வருகைகள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.	தாபன விதிக் கோவையின் தொடர்புடைய அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,987,159 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,750,,676 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				**2023**			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	20,157,000	27,609,007	3,247,288	1,174,054	12,701,633	12,116,195	9,314,302	7,395,121
ii.	வாடகை	11,082,000	12,856,705	13,377,087	1,837,418	6,975,000	7,607,808	5,916,308	2,353,800
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	452,000	452,000	537,000	-	2,588,000	3,175,990	3,055,690	264,218
		------------	-------------	-----------	---------	------------	------------	-----------	---------
		31,691,000	40,917,712	17,161,375	3,011,472	22,264,633	22,899,993	18,286,300	10,013,139
		=======	=======	=======	=======	=======	=======	=======	=======

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**ஆதனவரி**		
(i)	நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 7,394,988 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 4,501,220 அதாவது 61 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	வருடாந்த சிட்டையிடல் ரூபா 24,417,076 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 7,029,342 அதாவது 29 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(ஆ)	**வியாபார வரி**		
	நிலுவை வருமான அறிக்கையின் படி மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வியாபார வரி வருமான நிலுவை ரூபா 265,200 ஆக இருந்ததுடன் ஆண்டின்	மேற்படி	மேற்படி

	போது அதில் ரூபா 112,800 அதாவது 43 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை.		
(இ)	**வாடகை** மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கடை வாடகை நிலுவை ரூபா 2,357,800 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 592,475 அதாவது 25 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(ஈ)	**அனுமதிப் பத்திரக் கட்டணம்**		
(i)	மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட 04 நிலையங்கள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டததின் 167 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சபையில் இருந்து வியாபார அனுமதிப் பத்திரம் மற்றும் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமல் சுகாதாரத்திற்கு பாதகமான மூலப் பொருட்களை ஈடுபடுத்தி மிளகாய்த் தூள் உற்பத்தி செய்யப்பட்டமையால் நுகர்வோர் அதிகார சபை வழக்கு தொடர்ந்த வியாபார நிலையங்களுக்கு எதிராக சபை எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	**ஏனைய வருமானம்** மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்து, ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்ததும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 25,015,210 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 158,382,797 ஆகும்.	காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கும் நீதிமன்றத்திற்கும் சென்று பிரதிகளை எடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	பெற வேண்டிய வருமானத்தை அறவிடவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 09 வியாபார நிலையங்கள் அந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாது இருக்கும் போது வியாபார நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்கு சபையினால் வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறாது இருந்த நிறுவனங்களுக்காக வியாபார அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகளை காண்பித்து பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் பிரகாரம் உபவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	தேவையான பணிகளுக்காக உபவிதிகள் விதிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	சபையினால் 2022 ஆம் ஆண்டு வரை மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.	தற்போது 2026 வரை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	எதிர்வரும் 05 வருடங்களுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)(i)	மத்துகம பிரதேச சபையால் 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 02 கட்டங்களாக தனியார் நிறுவனத்தில் இருந்து முறையே ரூபா 1,565,000 மற்றும் ரூபா 1,855,000 ஆன கணனி மென்பொருள் முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 95,000 ஆன சம்பளம் தயாரிக்கும் முறைமை மற்றும் ரூபா 195,000 ஆன நூலக நடவடிக்கைகளை முகாமைத்துவம் முறைமைக்கு பதிலாக சபையினால் Pay Roll கணனி மென்பொருள் KOHA மென்பொருள் பயன்படுத்தப்பட்டதுடன் ரூபா 120,000 செலுத்தி கோவைகள் முகாமைத்துவம் முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 695,000 மற்றும் ரூபா 585,000 செலவில் இரண்டாவது தடவை கொள்வனவு செய்யப்பட்டிருந்த மனிதவள முகாமைத்துவம் முறைமை மற்றும் இணையதளம் ஊடாக ஒதுக்கிக்	கோவைகள் முகாமைத்துவம் முறைமையை அமுல்படுத்துவதற்காக பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு கோரப்பட்டுள்ளதுடன் மனித வள முகாமைத்துவம் முறைமையில் தரவுகளை உள்ளடக்குவதுடன் இணையதளம் ஊடாக ஒதுக்கும் முறைமையை அமுல்படுத்துவதற்கு கோரிக்கை விடப்பட்ட போதும் சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை.	கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருள் முறைமையை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும்.

	கொள்ளும் முறைமையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ii)	தேவைகளை இனங்காணாமல் ரூபா 1,690,000 ஆன மேற்கூறப்பட்ட 05 முறைமைகள் கொள்வனவு செய்வதற்கும், உடன்படிக்கைகளுக்கு முரணாக பயிற்சி வழங்கப்படாமல் அந்த 05 முறைமைகளுக்கும் உரிய பயிற்சியின் பின்னர் செலுத்த வேண்டிய 25 சதவீதம் அதாவது ரூபா 422,500 செலுத்தப்பட்டமை தொடர்பாகவும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்படுகின்றமை தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)(i)	சபைக்குரிய மத்துகம வத்த காணியில் அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு வழங்கப்பட்ட காணி அளவில் சரியாக இனங்கண்டு அதன் பிரகாரம் சபையின் காணிப் பதிவேட்டில் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பிரதேச செயலகம் மூலம் இந்த காணி கையளிக்கப்பட்டுள்ளது.	காணி அளவு சரியாக இனங்கண்டு அதன் பிரகாரம் காணிப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மேற்கூறப்பட்ட வளவில் எழுத்து மூல அங்கீகாரம் இன்றியும், எந்த ஒரு வாடகை செலுத்தாமலும் கால்நடை மருத்துவர் அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணித்து பேணிச் செல்வதற்கு எதிராக சபை எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்க வில்லை.	இது தொடர்பாக கண்டந்து சேர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குரிய ஆதனங்களை வெளிதரப்பினருக்காக முறையாக கையளிக்காமல் இருத்தல் வேண்டும்.
(ஆ)	முறையான பெறுகை நடைமுறைகள் இன்றி சபைக்குரிய காணி 2022 ஆம் ஆண்டில் வெளித்தரப்பினரால் 19 கடைகள் நிர்மாணித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாடகை செலுத்தாமல் கடை நடாத்திச செல்லப்படுகின்றமைக்கு எதிராக சபை சட்ட ரீதியான நடவடிக்கை	19 கடைகள் தொடர்பாக ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எடுக்காது இருந்ததுடன் சபைக்கு வருமானம் ஒன்று இழக்கப்பட்டமைக்கு நடவடிக்கை எடுத்த தரப்பினர் தொடர்பாக நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பிரதேச சபைக்குரிய பொதுச் சந்தையில் 09 கடைகள் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் களஞ்சியமாகப் பயன்படுத்தப் படுவதுடன் முத்திரை வைக்கப்பட்ட 02 கடைகள் மீளாய்வாண்டில் கேள்வி கோரும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க விலலை.	09 கடைகள் களஞ்சியமாக பயன்படுத்துவடன் நிலுவை கடை வாடகை செலுத்தாமையின் அடிப்படையில் 02 கடைகள் முத்திரை வைக்கப்பட்டுள்ளது.	கடைகளை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	சபையினால் உடன்படிக்கை காலத்தை விஞ்சுவதற்கு முன் வாடகை உடன்படிக்கையை புதுப்பித்தல் அல்லது மீண்டும் கேள்வி கோரி மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மத்துகம பொதுச் சந்தையில் 41 கடைகளும், மெத மிதுல இல் 04 கடைகளும், 06 மீன் கடைகளும் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் உடன்படிக்கை புதுப்பிக்காமல் காணப்பட்டது.	உடன்படிக்கை செய்வதற்காக இறுதி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு இல்லையாயின் கையேற்கப்படும்.	சபைக்குரிய கடைகளை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை செய்தல் வேண்டும்.
(இ)	05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிலுவையாகக் காணப்படுகின்ற வெலிப்பன்ன மெரில் முணசிங்க வியாபார கட்டிடத் தொகுதியின் கடை வாடகையான ரூபா 62,050 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் காணப்படுகின்றது.	நிலுவை கடை வாடகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சபைக்குரிய கடைகள் 2022 யூன் 06 ஆந் திகதியில் உள்ளவாறு மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காகவும் மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் வாடகை	தற்போது எதிர்வரும் ஆண்டிற்காக மதிப்பீடு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வாடகை அறவிடப்படல் வேண்டும்.

	அறவிவுடுதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(உ)	சபைக்குரிய 89 கடைகள் மற்றும் 11 மீன் கடைகளும், வெலிப்பன்ன உப அலுவலகத்தில் 34 கடைகளும் சபையுடன் உடன்படிக்கை செய்யாமல் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உடன்படிக்கை செய்யுமாறு இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன் அவ்வாறு இல்லையாயின் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடைகள் தொடர்பாக உடன்படிக்கை காணப்படல் வேண்டும்.

3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மத்துகம பிரதேச சபையின் முன்னாள் தலைவரால் சபை ஊழியர்களை ஈடுபடுத்தி தனிப்பட்ட தேவைகளுக்காக மண் வெட்டியமை தொடர்பாக வெளிதரப்பினரால் தொடரப்பட்ட வழக்கிற்காக மீளாய்வாண்டு வரை சபை நிதியத்தில் இருந்து ரூபா 39,000 வழக்கு கட்டணமாக செலுத்தப்பட்டதுடன் சபையின் உத்தியோகத்தர் மேற்கொண்ட முறைகேடுகளின் அடிப்படையில் கையளிக்கப்பட்ட வழக்கிற்காக செலுத்தப்பட்ட சட்டத்தரணி கட்டணம் அதற்குப் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறிவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் மற்றும் ஊழியர்களுக்காக செலுத்தப்பட்டுள்ளது.	வழக்குக் கட்டணம் உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும்.
(ஆ)	2022 ஒக்தேபார் மாதம் சபைக்கு உரிய ஜே.சீ.பீ இயந்திரம் டென்டர் நடைமுறைக்கு முரணாக ரூபா 470,250 செலவில் உத்தரவாத சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமல் உறுப்பினர் உத்தியோகத்தர் ஒருவரின் சகோதரரின் கராஜ் இல் இருந்து பழுது பார்க்கப்பட்ருந்த போதிலும் 2023 ஆம் ஆண்ல் மீண்டும் செயலிழந்து இருந்தது. மேற்கூறப்பட்ட பழுது பார்த்தல் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டமையாக டிப்போ பொறியியலாளர் பரிந்துரை செய்திருந்த போதிலும் 2023 மார்ச் அந்த பழுது பார்த்தல் மீண்டும் மேற்கொள்வதற்கு	விசாரணையின் தீர்ப்பினைப் பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

டிப்போ பொறியியலாளர் பரிந்துரை செய்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெக்கோ இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் செலவிடப்பட்ட நிதி நட்டமும் சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபைக்கு உரிய 12 ஏக்கர் 02 றூட் 36 பேர்ச் அளவினை உடைய புத்தகப் பெறுமதி ரூபா 12,500,000 ஆன பட்டமுல்ல கந்த காணியில் 02 றூட் 12.72 பேர்ச் வெளித்தரப்பினரால் உரிமை கோரப்பட்டமை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையால் உரிய தரப்பினருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அந்த தரப்பினரை விலகிச் செல்லுமாறு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சபைக்குச் சொந்தமான ஆதனங்களைப் பாதுகாத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்குரிய 07 ஏக்கர் 01 றூட் 11.4 பேர்ச் இனை உடைய புத்தகப் பெறுமதி ரூபா 20,000,000 ஆன மத்துகம வத்த காணியின் சபையின் ஊழியர் அல்லாத தரப்பினரால் அனுமதியற்ற வகையில் 11 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் சபையினால் அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்காமல் வீட்டின் உரிமையாளர்களிடம் இருந்து ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(இ)	2015 ஆம் ஆண்டின் போது சபைக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து நன்கொடையாகக் கிடைக்கப் பெற்றிருந்த ஸ்தியர் இயந்திரம் மற்றும் நீர்ப் போக்குவரத்து டெக்டர் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	பிரதேச செயலகம் உடன்படிக்கை மூலம் கையளித்துள்ளதுடன் செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த நன்கொடை ஆகும்.	சபை பயன்படுத்துகின்ற சொத்துக்கள் சபைக்கு கையேற்கப்படல் வேண்டும்.
(ஈ)	சபையினால் பயன்படுத்தப் படுகின்ற 72 மயான நிலங்களுக்கு இடையே 43 மயான நிலங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச செயலாளர் மூலம் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	மயான நிலங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்படல் வேண்டும்.

(உ)	காணிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 42 காணிகளின் உரித்து சபைக்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை.	கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	காணியின் உரித்து சபைக்கு கையேற்கப்படல் வேண்டும்.
(ஊ)	சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற தம்பரெட்டிய சனசமூக மண்டபம் மற்றும் வாடகை வீடு அமைந்துள்ள வளவில் உரித்து மத்துகம பிரதேச செயலகத்தில் இருந்து சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டு வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சபை பயன்படுத்துகின்ற ஆதனங்கள் சபைக்கு கையேற்கப்படல் வேண்டும்.
(எ)	2010 ஆம் ஆண்டின் போது ரூபா 5,100,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கல்மத்த பொதுச் சந்தையின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் கடைகள் மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்காமல் விளைவற்றுக் காணப்பட்டது.	இந்தக் கடைகள் 2024 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டதுடன் கேள்வி காரர் முன்வராமையின் அடிப்படையில் இவ்வாறு காணப்படுகின்றது.	சபைக்குரிய சொத்துக்களின் மூலம் வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2017, 2018 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மரணமடைந்த மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்தும் அறவிட வேண்டிய கடன் மீதி முறையே ரூபா 243,744 மற்றும் ரூபா 147,570 இற்கு இடையே எந்த ஒரு தொகையும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்க வில்லை.	கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையினால் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சில நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப் பட்ட தொகை மற்றும் அதனை நிறைவேற்றுவதற்கு	பதிலளிக்கப்படவில்லை.	செயல் நடவடிக்கைத் திட்டம் முறையாகவும் சரியாகவும் தயாரிக்கப்படல் வேண்டும்.

	எதிர்பார்க்கப்பட்ட கால எல்லை குறித்துரைத்த ரீதியில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பணிகள் பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றம் கால ரீதியில் அளவிடப்படாது இருந்தமையால் கட்டுப்பாட்டு உபகரணமாக செயல் நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.		
(ஆ)	தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை கூட்டுமொத்தமாக ரூபா 4,300,000 தொகைக்கு உரிய 17 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 ஆம் ஆண்டிற்காக 15 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 37,000 முதல் ரூபா 4,000,000 வரையிலான வீச்சில் கூட்டுமொத்தமாக ரூபா 18,959,000 நிதியேற்பாட்டில் 79 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான அளவில் சேமிக்கப்பட்டிருந்தது.	உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	பாதீடு சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்தில் நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் அடைந்து கொள்ளக் கூடிய இலக்குகள் சரியாக உள்ளடக்கப்படாது இருந்ததுடன் அதன் செயல் முன்னேற்றம் காலாண்டு ரீதியில் அளவிடலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரியாகத் தயாரிக்கப்படும்.	நிலை பேறான அபிவிருத்தித் திட்டம் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.